# தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடிநாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள், போடி நகரம், பழனி செட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன்,
தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம்
நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

# நடமாடும் மருத்துவமனைகளில் தமிழ்நாடு முதலிடம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

கர்ப்பிணிகளுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்கி தாய்சேய் நலனை உறுதி செய்துள்ளன. ரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்ற தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்கள் மருத்துவ மனைக்கு அலையாமல், வீடுகளிலேயே தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தடையின்றிப் பயனடைந்து வருகின்றனர்.

பிரமாண்டமான கட்டமைப்பைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் பல பெரிய மாநிலங்கள், தமிழ்நாட்டின் இந்த மனிதநேயப் பணிக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல மைல் தூரம் பின்தங்கியுள்ளன என்பதை ஒன்றிய அரசின் தரவுகளே வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

**பா.ஜ.க. ஆளும்
பின்தங்கிய மாநிலங்கள்!**

மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரபிரதேசத்தில் வெறும் 170 வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. பல ஆண்டுகளாக 'குஜராத் மாடல்' எனப் புகழப்படும் குஜராத் மாநிலத்தில் வெறும் 74 வாகனங்கள் மட்டுமே சேவையில் உள்ளன. நாட்டின் வர்த்தகத் தலைநகரான மகாராஷ்டிராவோ வெறும் 20 வாகனங்களை மட்டுமே இயக்கி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

அடித்தட்டு மக்களுக்கான உயிர்காக்கும் மருத்துவச் சேவை என்பது சலுகையல்ல, அது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு நிரூபித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரம், தமிழ்நாட்டின் 'திராவிட மாடல்' ஆட்சியின் 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கொள்கை இந்தியாவிற்கே மிகச்சிறந்த வழிகாட்டி என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

## ஒற்றுமையைச் சிதைக்க அனுமதிக்கமாட்டோம்!

# பிரதமர் மோடிதான் மிகப்பெரிய ஊடுருவல்காரர்!

## மேற்குவங்க முதல்வர் மம்தா ஆவேசம்!

கொல்கத்தா, மார்ச் 23-

பிரதமர் மோடி தான் மிகப் பெரிய ஊடுருவல்காரர் என்று மேற்குவங்க முதல்வர் மம்தா ஆவேசமாக தெரிவித்தார்.

ரமலான் பண்டிகையை முன்னிட்டு கொல்கத்தாவின் புகழ்பெற்ற 'ரெட் ரோடு' பகுதியில் நடைபெற்ற ஈத் தொழுகைக்குப் பிறகு, அங்கு கூடியிருந்த இஸ்லாமிய மக்களிடையே முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது:

பிரதமர் மோடியும், பாஜவும் உங்கள் வாக்குரிமையைப் பறிக்க அனுமதிக்க மாட்டோம். இறுதி வரை போராடுவோம். எஸ்.ஐ.ஆர். பணிகளை எதிர்த்து நீதிமன்றங்களை அணுகியுள்ளோம். நீங்கள் (பிரதமர் மோடி) வெளி நாடுகளுக்குச் செல்லும் போது, அங்குள்ள தலைவர்களுடன் கைகுலுக்கி நட்பு குறித்துப் பேசுகிறீர்கள். அது உங்கள் விருப்பம்; நான் அனைத்து நாடுகளையும் மதிக்கிறேன்.

ஆனால், நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பியதும், திடீரென்று 'இந்துமுஸ்லிம்' என்ற பிரிவினைவாதப் பேச்சு தொடங்குகிறது; மக்கள் 'ஊடுருவல்கா ரர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். அதன்பின், மக்களின் பெயர்களை நீக்குமாறும், அவர்களை 'ஊடுருவல்காரர்கள்' என்று முத்திரை குத்துமாறும் நீங்கள் கோருகிறீர்கள். ஆனால் நான் சொல்கிறேன், நீங்களே (மோடி) மிகப் பெரிய ஊடுருவல்காரர்தான்.



எங்கள் அரசாங்கத்தைக் கைப் பற்றி, ஒரு அதிகாரப்பூர்வமற்ற ஜனாதிபதி ஆட்சியைத் திணித்துள்ளீர்கள். ஆனால் நாங்கள் அஞ்சமாட்டோம். அனைத்து சமூக மக்களுடன் நான் நட்புறவுடன் இருக்கிறேன். எனவே வேறு யாரும் உங்களுக்குத்துணையாக நிற்கா விட்டாலும், மதங்கள், சாதிகள் மற்றும் நம்பிக்கைகளைக் கடந்து, மேற்குவங்க மக்களாகிய உங்கள் குடும்பத்தின் ஒரு உறுப்பினராக, நான் உங்களுக்குத் துணையாக நிற்பேன்.

மேற்குவங்கத்தை குறி வைத்தும், மக்களைப் பிளவுபடுத்தவும் முயன்று வருபவர்கள் நரகத்திற்குச் செல்லட்டும். இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் என அனைவரும் மேற்குவங்கத்தில் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த ஒற்றுமையைச் சிதைக்க யாரையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பா.ஜ.வை அகற்றுவோம்; தேசத்தைக் காப்போம்.

இவ்வாறு மம்தா பானர்ஜி அவர்கள் கூறினார்.

## ஈரான் மீதான தாக்குதல்:

# மோடி அரசு கண்டிக்காதது கோழைத்தனம்!

## காங்கிரஸ் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 23 -

"ஈரான் மீதான தாக்குதலை மோடி அரசு கண்டிக்காதது, தார்மீக கோழைத்தனம், அரசியல் துரோகம்" என காங்கிரஸ் கடுமையாக விமர்சித்துள்ளது. காங்கிரஸ் பொதுசெயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தன் எக்ஸ் சமூக ஊடக தளத்தில்,

"ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் வான்வழி தாக்குதல் தொடங்கி சரியாக 21 நாள்கள், 3 வாரங்கள் ஆகிறது. பா.ஜ. அரசால் பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட மோடி இஸ்ரேல் பயணத்திலிருந்து திரும்பி வந்து 23 நாள்கள் ஆகி விட்டன. அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் சேர்ந்து ஈரான் மீது நடத்திய கடுமையான வான்வழி தாக்குதல் இந்தியா உள்பட அனைத்து நாடுகளிலும் பொருளாதார சீர்குலைவுக்கு வழி வகுத்துள்ளது.

இந்த தாக்குதலை மோடி அரசு கண்டித்ததா? விமர்சித்ததா? அல்லது கண்டனம் தெரிவித்ததா? என்றால் இல்லை என்பதே பதில். அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து ஈரானின் உயர்மட்ட தலைவர்களை குறி வைத்து படுகொலைகளை செய்து வருகிறது. இதனை மோடி அரசு கண்டித்ததா? விமர்சித்ததா? அல்லது கண்டனம் தெரிவித்ததா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

ஈரானில் உள்நாட்டு போருக்கு வழி வகுக்க கூடிய ஆட்சி மாற்றத்தையும், அரசு வீழ்ச்சியையும் திணிக்க அமெரிக்காவும், இஸ்ரேலும் எடுக்கும் கொடூரமான முயற்சிகளை மோடி அரசு கண்டித்ததா? விமர்சித்ததா? அல்லது கண்டனம் தெரிவித்ததா? என்பதற்கும் இல்லை என்பதே பதில்.

ஈரான் மீதான குண்டு வீச்சுகளையும், வளைகுடா நாடுகளில் உள்ள எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான ஈரானின் தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்துவதற்கு மோடி அரசு தீவிர ராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டதா?

அமெரிக்க அதிபர் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோருடன் பெரிதாக பேசப்படும் தனது நட்பை பயன்படுத்தி பிரதமர் மோடி போர் நிறுத்தத்தை ஏற்படுத்தினாரா? என்ற கேள்விக்கும் இல்லை என்பதே பதில். இந்த நான்கு இல்லைகளும், இந்தியாவின் நாகரீக விழுமியங்களின் கோழைத்தனத்தையும், அரசியல்துரோகத்தையுமே பிரதிபலிக்கின்றன" என்று காட்டமாக குற்றம்சாட்டி உள்ளார்.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம், தாமரைபுலம் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 30 குடும்பத்தினர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் கிளைக் கழகச் செயலாளர்கள் பாலசுந்தரம், இருளப்பன், மாவட்டத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ராமசாமி, பாகநிலைய முகவர்கள் காளிதாஸ், புஷ்பராஜன், மாவட்டப் பிரதிநிதி மச்சழகன், தகவல் தொழில்நுட்ப பணி ஒருங்கிணைப்பாளர்கள் மணிகண்டன், நந்தன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் அமுதா குணசேகரன் ஆகியோர் உள்ளனர்.



# தி.மு.க.
# இளைஞர் அணி

**மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர்,
துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்கள வீரர்களாக இளைஞர் அணியினர் செயலாற்றும் வகையில், மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். மார்ச் 23, 24, மற்றும் 25 ஆகிய தேதிகளில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெற உள்ள இந்தக்கூட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

**23.3.2026 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 11.00 மணி | கோவை, நீலகிரி மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | எம்.என்.சி.ஆர். கிராண்ட் பேலஸ், முதலிபாளையம், அவிநாசி சாலை, கோவை. |
| மாலை 3.00 மணி | ஈரோடு, நாமக்கல் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | தங்கம் மஹால், பெருந்துறை சாலை, மேட்டுக்கடை, ஈரோடு. |
| மாலை 6.00 மணி | கரூர், திருப்பூர் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பிரேம் மஹால், கரூர். |

**24.3.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | தேனி, திண்டுக்கல் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பி.எஸ்.என்.ஏ.மஹால், ரவுண்ட் ரோடு, திண்டுக்கல். |
| மாலை 3.00 மணி | மதுரை, விருதுநகர் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஐடா ஸ்கட்டர் அரங்கம், சிந்தாமணி, மதுரை. |
| மாலை 6.00 மணி | இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ராஹா பேலஸ், கீழகண்டனி, மானாமதுரை சாலை, சிவகங்கை. |

**25.3.2026 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருநெல்வேலி - கன்னியாகுமரி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | மூன் மஹால், என்.ஜி.ஓ. குடியிருப்பு, பாளையங்கோட்டை. |
| மாலை 3.00 மணி | தூத்துக்குடி - தென்காசி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஸ்ரீ நவீரா பேலஸ், கோவில்பட்டி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21.3.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## தி.மு.கழகக் கூட்டணிக்கு

# அம்பேத்கர் முன்னணிக் கழகம் ஆதரவு!

## திண்டிவனம் ஸ்ரீராமலு அறிக்கை!

சென்னை, மார்ச். 23-

"நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிக்கு அம்பேத்கர் முன்னணிக் கழகம் ஆதரவளிக்கும்" என்று அம்பேத்கர் முன்னணி கழக மாநில நிறுவன பொதுச் செயலாளர் திண்டிவனம் ஸ்ரீராமலு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரும் தமிழ்நாடு சட்ட மன்ற பொது தேர்தலில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணிக்கு அம்பேத்கர் முன்னணி கழகம் ஆதரவு அளிக்கிறது. 2021 ம் ஆண்டு முதல் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டு மக்கள் மூலம் பெரும் ஆதரவையும் பாரட்டையும் பெற்று வருகிறார்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க வேட்பாளர்களையும் மற்றும் தோழமை கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற பாடுபட ஆதரவு தருகிறோம் என்பதை அம்பேத்கர் முன்னணி கழகம் மற்றும் சென்னை துறைமுக ஆதி திராவிடர் மலை ஜாதி தொழிலாளர்கள் சங்கம் சார்பில் மாநில நிறுவன பொது செயலாளர் திண்டிவனம் ஸ்ரீராமுலு அறிக்கையின் மூலம் ஆதரவு தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்டம், கோபி சட்டமன்றத் தொகுதி காசிபாளையம் பேரூராட்சி 8வது வார்டு அதிமுக பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆர்.சிவகாமி தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலையில் அம்பிகா, வளர்மதி, மாராள், சாந்தாள், சென்னியம்மாள், நாகம்மாள், சுப்பாயாள், நதியா, செந்தில், கார்த்தி, உள்ளிட்ட அதிமுகவினர் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.